

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி ஆபத்தாரணன்பட்டியில் புதிய தார் சாலை அமைக்கும் பணியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் துவக்கி வைத்தார்.உடன் பூமிநாதன் எம்.எல்.ஏ., மாவட்டக் கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் சிங்கம்புணரி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், துணை செயலாளர் எஸ்.முத்துகுமார் மற்றும் கிராம மக்கள் உள்ளனர்

## தமிழ்நாட்டிலுள்ள, மெகா உணவுப் பூங்காக்களின் செயல்பாட்டை

# துரிதப்படுத்த ஏதேனும் திட்டங்கள் அரசால் மேற்கொள்ளப்படுமா?

### மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 16 -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 12 மார்ச்; 2026 அன்று மக்களவையி;ல், தமிழ்நாட்டில் அமைந்துள்ள மெகா உணவுப் பூங்கா க்களின் செயல்பாட்டை துரிதப்படுத்தி நிறைவேற்ற ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? என்றும், செயல்படாத திட்டங்களை விரைவுப்படுத்த சிறப்பு முயற்சிகள் ஏதேனும் மேற்கொள்ளப்படுமா? என்றும் இதன் விவரங் களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் உணவுப்பதப்படுத்துதல் துறையின் இணையமைச்சர் ரவ்நீத் சிங்கிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதனை ஒன்றிய அரசின் உணவுப்பதப்படுத்தல் துறையின் இணைய மைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு :

இந்தியா முழுவதும் 41 மெகா உணவுப் பூங்காக்கள் அமைந்துள்ள நிலையில், இவற்றில் 25 மெகா உணவுப் பூங்காக்கள் மட்டும் முறையாக செயல்பட்டு வருகின்றன என்றும் தமிழ்நாட்டிலுள்ள திருநெல்வேலியில் மெகா உணவுப் பூங்கா செயல்படுத்தபட உள்ளது என்றும், இதுவரை ரூபாய் 13 கோடிகள் நிதியுதவி அளிக்கப்பட்டு அதற்கான வேலைகள் நடந்து வருகின்றன என்றும், தமிழ்நாடு விவசாய சந்தை ஆணையத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், தேவையான கடைகளை ஏலம் விடுவதில் சிறிது தடங்கல்கள் ஏற்பட்டுள்ளது என்றும், விரைவாக உணவுப் பூங்காக்கள் செயல்பட தேவையான அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்று ஒன்றிய அரசின் ணவுப்பதப்படுத்துதல் துறையின் இணையமைச்சர் ரவ்நீத் சிங், மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்துள்ளார்.

## தமிழ்நாடு தலை குனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



### மாவட்டக் கழகச் செயலாளர்கள் அறிவிப்பு!

| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/நகர/பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச் 16 | மாலை 5.00 மணி | கோவில்பட்டி<br>விளாத்திக்குளம் | கயத்தார் ஒன்றியம் மற்றும் கயத்தார், கடம்பூர் பேரூர்கள் கோவில்பட்டி ஒன்றியம், கோவில்பட்டி மேற்கு நகரம் – கழுகுமலை பேரூர்<br>எட்டையாபுரம் பேரூர் | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |
| மார்ச் 16 | இரவு 7.00 மணி | ஒட்டப்பிடாரம் (தனி)<br>திருவைகுண்டம் | அன்னை இந்திராநகர் பகுதி கருங்குளம் வடக்கு ஒன்றியம்<br>கருங்குளம், சாத்தான் குளம், திருவைகுண்டம் மேற்கு ஆகிய ஒன்றியங்கள், பெருங்குளம், திருவைகுண்டம் பேரூர்கள் | செய்துங்கநல்லூர் கருங்குளம் |
| மார்ச் 17 | காலை 9.00 மணி | நாங்குநேரி | களக்காடு நாங்குனேரி, பாளையங்கோட்டை ஆகிய ஒன்றியங்கள் திருக்குறுங்குடி மூலக்கரைப்பட்டி ஆகிய பேரூர்கள் | அழகு மஹால் செங்குளம் நாங்குநேரி |
| மார்ச் 17 | மாலை 4.00 மணி | திருநெல்வேலி<br>பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை மானூர் ஆகிய ஒன்றியங்கள், சங்கர்நகர், நாராணம்மாள்புரம் ஆகிய பேரூர்கள்<br>பாளையங்கோட்டை வடக்கு, மேலப்பாளையம் கிழக்கு மேலப்பாளையம் மேற்கு ஆகிய பகுதிகள் | அமோகா பேலஸ் தச்சநல்லூர் பாளையங்கோட்டை |
| மார்ச் 17 | இரவு 7.00 மணி | அம்பாசமுத்திரம் | சேரன்மாதேவி ஒன்றியம் அம்பாசமுத்திரம் நகரம், கல்லிடைக்குறிச்சி, கோபால சமுத்திரம், சேரமன்மாதேவி, மணிமுத்தாறு, மேலசேவல், விக்கிரமசிங்கபுரம், வீரவநல்லூர் ஆகிய பேரூர்கள் | எஸ்.எல்.எம். மண்டபம் வீரவநல்லூர் அம்பா சமுத்திரம் |

**இவண் - தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் கீதா ஜீவன், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ராதாகிருஷ்ணன், திருநெல்வேலி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் கிரகாம்பெல், திருநெல்வேலி மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், திருநெல்வேலி மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு. அப்துல்வகாப்**

## முதல்வர் காணொலியில் திறந்து வைத்தார்! மயிலாடுதுறையில் ரூ.29,01 கோடியில்

# பெருந்தலைவர் காமராஜர் புதிய பேருந்து நிலையம்!

### விழாவில் அமைச்சர் சிவ வீ மெய்யநாதன், நிவேதா முருகன் எம்,எல்,ஏ,பங்கேற்பு!

மயிலாடுதுறை, மார்ச் 16 –

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.29.01 கோடி மதிப்பீட்டில் மணக்குடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் புதிய பேருந்து நிலையத்தை; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இதையத்து மயிலாடுதுறையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த் தலைமை தாங்கினார்.மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாலளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகள், மயிலாடுதுறை , மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ். ராஜகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மயிலாடுதுறை நகர்மன்ற தலைவரும்) நகரக் கழச் செயலாளர் குண்டாமணி (எ) என்..செல்வராஜ் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்த பேருந்து நிலைத்தை பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சர் . சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு குத்துவிளக் கேற்றி வைத்து, பேருந்து நிலை யத்தில் இருந்து பல ஊர்களுக்கு செல்லும் பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்து பேசுகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மயிலாடுதுறை மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில், மயிலாடுதுறை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ரூ.46 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மயிலாடுதுறையில் வருவாய் கோட்டாட்சி யர் அலுவலகம் புதிதாக கட்டப்பட்டுள்ளது. இதுபோன்று எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தந்துள்ளார்கள். மாவட்ட மக்களின் நீண்ட நாள் கனவாக இருந்த, மயிலாடுதுறை புறவ ழிச்சாலை பணிகள், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் அவர்களின் பெருமுயற்சியில், ரூ.185.35 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அதேபோன்று மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள கடற்கரை மீனவ கிராமங்களில் மீன் இறங்குதளங்கள், மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்துதல், முகத்துவாரங்களை தூர்வாருதல், கடல்நீர் உட்புகுவதை தடுக்கும் வகையில் நேர்க்கல், சுவர் அமைத்தல் உட்பட ரூ.1500 கோடிக்கு மேலான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், இப்பகுதி மக்களின் கோரிக்கையான மயிலாடுதுறை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார் கோவில் வட்டாரம், ஆறுபாதி கிராமத்தில் நிலத்தடி நீரில் கழிவு நீர் கலந்து மாசுபடுவதையொட்டி, ரூ.19 கோடி மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டத்தை அறிவித்து தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தை அறிவித்ததோடு மட்டுமல்லாமல் இந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை பத்து ஆண்டுகளுக்கு பராமரிப்பதற்கான நிதியினையும் சேர்த்து நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இவ்வாறு இப்பகுதி மக்களின் தேவையறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு திட்டங்களாக நிறைவேற்றி வருகிறார்கள். இந்த அரிய திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய பேருந்து நிலையத்தில், பேருந்து நிற்கும் இடங்கள் 28 எண்ணிக்கையும், 15மீ அகலம் கொண்ட 1000மீ நீளமுள்ள சாலை, கடைகள் 49 ம் பயணிகள் காத்திருக்கும் இடம் 10ம், பொருட்கள் வைப்பறை 1ம் உணவகம் 2 எண்ணிக்கையும், தாய்மார்கள் பாலூட்டும் அறை 2ம், அரசு போக்குவரத்து கழக அலுவலகம் மற்றும் முன்பதிவு மையம் 1ம் நேரம் காப்பாளர் அறை 2 ம், காவல் துறை அறை 1 ம், ஏடிஎம் 1 ம், கட்டுப்பாட்டு அறை 1ம், நவீன வசதிகளுடன் கூடிய இலவச கழிப்பறைகள் 2ம், மாற்று திறனாளி களுக்கான கழிப்பறை 2 உள்ளிட்ட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இப்புதிய பேருந்து நிலையத்தில் சுற்றுசுவர், முன் நுழைவு நடைபாதை, பேருந்து நிறுத்தும் இடங்களில் மேற்கூரைகள், சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, பயணிகள் அமரும் இருக்கை வசதி மற்றும் இருசக்கர வாகன நிறுத்துமிடம் போன்ற இதர வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார் .

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) .கோகுல் , மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பூங்கொடி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தவிஜயலெட்சுமி கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க. அன்பழகன், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெகவீரட்டாண்டியன், இலக்கிய அணி துணைச் செயலாளர் வை. சௌமியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ் செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா அலெக்சாண்டர்,

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, என். இளையபெருமாள், ஞான இமையநாதன், ப.முருகமணி, மங்கை எம். சங்கர், செல்லசேது.ரவிக்குமார், பி.எம்அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், அமிர்த.விஜயகுமார், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், பஞ்சு.குமார், மலர்விழிதிருமாவளவன்,சீர்காழி நகரக கழகச் செயலாளர், ம.சுப்பராயன்,

பேரூர் கழகச் செயலாளர்கள் என்.அண்ணாதுரை, எஸ்.கே.முத்துராஜா, எம். சம்சுதீன், எம்.அன்புச்செழியன், அரசு வழக்கறிஞர் சி. அருள்தாஸ்,மாவட்ட அறங்காவல் குழு தலைவர் வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ். சங்காநாராயணன், நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்ஷத், சுபாநெடுஞ்செழியன், அ.காந்தி, ஜெ. கபிலன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே.மருது, ஆர். சாந்தி, தீபாசத்தியேந்திரன், இரா. செல்வராஜ், ஆர்.எஸ்.ஸ்ரீதர், டி. ராஜ்குமார், இரா.தனராஜ், , காளி. தேசப்பன், வி.எஸ்.பிரபாகர், மா.வைத்தியநாதன், எஸ்.எம்.சம்சுதின்,நகராட்சி ஆணையர் வீர முத்துக்குமார், மயிலாடுதுறை நகரக் கழக நிர்வாகிகள் மலைக்கோயில் பிரபாகர், சிவகுமார், வை. தெய்வநாயகம், ஆர்.கே.சங்கர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பா.ஜ.க. NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 15.03.2026, ஞாயிறு அன்று காலை 10.00 மணியளவில் நாகர்கோவில், மாவட்ட தலைமை தபால் நிலையம் அருகில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது. தி.மு.க. நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் முன்னிலை வகித்தார். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி. ஜெ. ஹெலன் டேவிட்சன் தமிழ்நாடு மாநில உணவு வாரிய தலைவர் என். சுரேஷ்ராஜன், மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என். தில்லைசெல்வம் உள்ளிட்ட தோழமைக் கட்சியினர் பங்கேற்றனர்.

## அரியலூர் மாவட்டத்தில்

# 26 புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், மார்ச் 16 -

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் (லிட்) திருச்சி மண்டலத்தின் சார்பில் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் நகராட்சியில் 14 பேருந்துகள், செந்துறை ஊராட்சியில் 5 பேருந்துகள் மற்றும் அரியலூர் நகராட்சியில் 7 பேருந்துகள் என மொத்தம் 26 புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள் தடமாற்றம் மற்றும் தட நீட்டிப்பு செய்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

26 பேருந்துகள் தடமாற்றம் மற்றும் தட நீட்டிப்பு செய்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்படி அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில், ஜெயங்கொண்டம் கிளை புறநகர் பேருந்து தடம் எண்.586 ஜெயங்கொண்டம் கும்பகோணம், நகரப்பேருந்து தடம் எண்.013A ஜெயங்கொண்டம் அணைக்கரை, நகரப் பேருந்து தடம் எண்.001E ஜெயங்கொண்டம் காட்டுமன்னார்குடி, புறநகரப் பேருந்து தடம் எண்.509I சென்னை விக்கிரமங்கலம், புறநகரப் பேருந்து தடம் எண்.611C ஜெயங்கொண்டம் புதுக்குடி, புறநகரப் பேருந்து தடம் எண்.624E ஜெயங்கொண்டம் பிலாக்குறிச்சி, புறநகரப் பேருந்து தடம் எண்.626A ஜெயங்கொண்டம் கோட்டைக்காடு, நகரப் பேருந்து தடம் எண்.010A ஜெயங்கொண்டம் ஆனந்தவாடி, நகரப் பேருந்து தடம் எண்.011A ஜெயங்கொண்டம் ஆதனக்குறிச்சி, புறநகரப் பேருந்து தடம் எண்.625E ஜெயங்கொண்டம் வேப்பூர், புறநகரப் பேருந்து தடம் எண்.531I அரியலூர் ஜெயங்கொண்டம் புறநகரப் பேருந்து தடம் எண்.628A இரும்புலிக்குறிச்சி மயிலாடுதுறை, விழுப்புரம் கிளை நகரப் பேருந்து காட்டுமன்னார்குடி முட்டம், நகரப்பேருந்து காட்டுமன்னார்குடி அனைக்கரை ஆகிய 14 பேருந்துகளை தடமாற்றம் மற்றும் தடநீட்டிப்பு செய்து துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து செந்துறை பேருந்து நிலையத்திலிருந்து விழுப்புரம் கிளை நகரப் பேருந்து பெண்ணடம் செந்துறை, நகரப் பேருந்து திட்டக்குடி செந்துறை, நகரப் பேருந்து செந்துறை விருத்தாச்சலம், நகரப் பேருந்து விருத்தா ச்சலம் ஆர்.எஸ்.மாத்தூர், அரியலூர் கிளை பேருந்து வாளரக்குறிச்சி சவுரிகாடு ஆகிய 5 பேருந்துகள் தடமாற்றம் மற்றும் தடநீட்டிப்பு செய்து துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், அரியலூர் பேருந்து நிலையத்தில் நகரப்பேருந்து அரியலூர் ஓரியூர், நகரப்பேருந்து அரியலூர் நாகல்குழி, நகரப்பேருந்து அரியலூர் இரும்புலிக்குறிச்சி, நகரப்பேருந்து அரியலூர் புதுக்குடிசை, புறநகரப்பேருந்து தஞ்சாவூர் கொளத்தூர், புறநகரப்பேருந்து திருவையாறு காமரசவல்லி, நகரப்பேருந்து திருமானூர் கோவிலூர் ஆகிய 7 பேருந்துகள் தடமாற்றம் மற்றும் தட நீட்டிப்பு செய்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பிரேமி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் மனோகரன், கோட்ட மேலாளர் ராம்குமார், வட்டாட்சியர்கள் ஆனந்தன் (ஜெயங்கொண்டம்) கோவிந்தராஜ் (செந்துறை), அரியலூர் நகராட்சி ஆணையர் அசோக்குமார், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.மணிமாறன், ஆர்.கலியபெருமாள், இரா.அண்ணாதுரை, நா.கணேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், தொமுச மண்டல தலைவர் டி.சேகர், அரியலூர் தொமுச செயலாளர் பி.வி. அன்கழகன், தொமுச நிர்வாகிகள் கொளஞ்சி, செல்வம், சுப்ரமணியன், குமார், கருணாநிதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் , இதர அரசு அலுவலர்கள் மற்றும் போக்குவரத்து கழக பணியாளர்கள், தொழிற் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் மத்திய ஒன்றியம், கண்டம்பாக்கம் ஊராட்சியில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடை கட்டிடத்தை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் கப்பூர் ராஜா, கோலியனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் E.சச்சிதானந்தம், பொதுக்குழு உறுப்பினர் சம்பத் மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,கீழவைப்பார் ஊராட்சி,சிப்பிகுளம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ7 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழற்குடையினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், ராமசுப்பு நவநீதகண்ணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.